**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 205/2022**

**Prosecution witness : அ.சா. 8 Date : 01.04.2024**

| | |
|---|---|
| **Name : ரஜினிகாந்த்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஈரோடு மாவட்டம் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சாமியப்பன் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 08.01.2021–ம் தேதி இரவு 11.00 மணிக்கு முஸ்தபா த/பெ அலி என்பவர்நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.30/2021 ச/பி 279, 304(A) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார். பிறகு புலனாய்வுக்காக என் வசம் ஒப்படைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.**

3) கடந்த 09.01.2021–ம் தேதியன்று காலை 06.30 மணிக்கு சம்பவயிடமான தொப்பூர் டு மேச்சேரி ரோட்டில் திமிரிக்கோடடை என்ற இடத்தில் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நல்லதம்பி மற்றும் பாலாஜி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். **பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.**

4) பிறகு முஸ்தபா, சாகுல்அமிது, பல்கீஸ், அன்சார், ஆதி, சிபிலி, நிஜாமுதின் , தில்ஷா, அன்ஷா, நல்லதம்பி, பாலாஜி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட இஜாஸ் அகமது என்பவர்

சேலம் கோகுலம் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு பதியப்பட்டது. விபத்துபதிவேடு **அ.சா.ஆ.5 ஆகும்**. பின்னர் சிகிச்சை பலனின்றி இஜாஸ் அகமது என்பவர் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு உறுதி அறிக்கை **அ.சா.ஆ.6 ஆகும். Police Intimation அ.சா.ஆ.7 ஆகும்.** பின்னர் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை இஜாஸ் அகமது அவர்களுக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் சரண்குமார் அவர்களிடம் தலைமை காவலர் சேகர் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 09.01.2021–ம் காலை 11.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.9.** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கில் காயம் அடைந்த முகமது லியாஸ் என்பவர் சம்பவ இடத்திலேயே அடிப்பட்டு இறந்துபோன காரணத்தால் அவரது சடலம் பிண அறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை இஜாஸ் அகமது அவர்களுக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் சரண்குமார் அவர்களிடம் தலைமை காவலர் சேகர் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 09.01.2021–ம் காலை 11.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.11.** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) விபத்தில் ஈடுபட்ட KN 3904 Bajaj இருசக்கரவாகனம் கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.12 ஆகும்.**

விபத்தில் ஈடுபட்ட TN 34 V 8364 மாருதி சுசுகி ஆம்னி கார் கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு

செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும்.**

6) கடந்த 11.01.2021ம் தேதி மாலை 04.30 மணிக்கு மேச்சேரி காவல் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 15.04.2021-ம் தேதி குற்றஎண்.30/2021 ச/பி 279, 304(A) இதச இதச ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

8) இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாமியப்பனை என்று விசாரித்தேன் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தேன். நபர்கள் இறப்பு குறித்து புலனாய்வு அதிகாரி புலனாய்வு மாறுபடும் என்றால் சரிதான். இரண்டு பேர் இறந்ததால் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு பதிவு செய்ய அதிகாரம் உள்ளதா என்றால் உள்ளது.

9. சிறப்பு உதவி ஆய்வாளருக்கு பதிவு செய்யத பிறகு முதல் நிலை விசாரணை செய்ய அதிகாரம் உள்ளதா என்றால் இல்லை. காவல் நிலைய ஆணையின் படி சிறப்பு உதவி ஆய்வாளர் இரண்டு பேர் இறந்ததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. புகாரை எழுதயவர் அப்துல் ஜலில் என்ற பெயர் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் விசாரித்து சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

10. அப்துல் ஜலில் என்பவரை ஏன் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் தவறுதலாக சேர்க்கவில்லை. இந்த புகாரை அவர் எழுததாதால்தான் அவரை சேர்க்கவில்லை. இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரை உள்ளவர்களை எங்கு, எப்போது விசாரித்தோம் என்றால் ஓமலூர் அரசு மருத்துவமனையில் வைத்து 09.01.2021ம் தேதியில் விசாரித்தோம். பட்டியல் சாட்சி 1 முதல் 4 மற்றும் 6 ஆகிய சாட்சிகள் சம்பவம் நடந்த அன்றே

விசாரித்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

11. இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் சம்பவம் நடந்த இடம் குண்டும் குழியுமான இடம் என்று சொன்னால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர்கள் குண்டும் குழியுமான சாலை யை தவிர்ப்பதற்காக திடீர் என்று இடது புறமாக திருப்பி எதிரே வந்த ஆம்னி காரில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கும் ஆம்னி வாகனத்தின் ஓட்டுனருக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெறுவதற்காக அ,சா1 தவறாக கொடுத்த பபுகாரினை சரிவர விசாரிக்காமல் சிறப்பு உதவி ஆய்வாளர் தவறுதலாக போட்டு வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையின் மேல் சரிவர விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா 6, 7 அவர்கள் இரண்டுபேரும் விபத்துக்குள்ளனா ஆம்னி வேனில் பயணித்தார்கள் என்றால் சரிதான். எனது விசாரணையில் விபத்தில் இறந்துபோன நபர்கள் ஓட்டிவந்த இருசக்கரவாகனத்தை கவனகுறைவாகஓட்டி வந்து மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் இல்லை.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**